

குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கே.எம்.ராஜீவை அவர்களை ஆதரித்து கோத்தகிரி ஜான்சன் சதுக்கத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. உரையாற்றினார். உடன் கொறடா கழக மாநில தேர்தல் பணிக்குழுச் செயலாளர் க.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் டி.லதா கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் வடக்காலத்தூரில் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். தேர்தல் பிரச்சாரத்தை கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும், கீழவேளூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு தலைவர் ப.கோவிந்தராஜன் தொடங்கி வைத்து பேசினார். உடன் திமுக கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதிபார்வையாளர் இரா.சங்கர், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் மாரிமுத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சிவகுருநாதன்,கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே. பழனியப்பன் மற்றும் கழகத்தினர் கூட்டணி கட்சியினர் உள்ளனர்.




மொடக்குச்சி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் செந்தில்நாதன் கஸ்பாபேட்டை ஒன்றியத்துக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளைபொதுமக்களிடம் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பல கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் சி.கே.ராஜா தான் மாட்டு வண்டி ஓட்டியதை நினைவு கூரும் வகையில், மாட்டு வண்டியில் வந்து தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். ஆயிரக்கணக்கில் கழகத்தினர் மற்றும் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.



குன்னூர் சட்டமன்ற தொகுதியின் மதசார்பாற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர் கே.எம்.ராஜ் மேலூர் ஒன்றியத்திற்குபட்ட பகுதிகளில் கழக அரசின் சாதனைகளையும், தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகளை பட்டியலிட்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா. ராமச்சந்திரன், மாவட்ட அவை தலைவர் போஜன், மேலூர் ஒன்றிய செயலாளர் லாரன்ஸ், CPI பெள்ளி உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




குன்னூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் கே.எம்.ராஜு குன்னூர் ஒன்றியத்துக்குட்பட்ட கரிமரா, கரோலினா, வள்ளுவர் நகர், வாசுகி நகர், வசந்தம்நகர், வசம்பள்ளம், ஸ்டான்லி பார்க், அம்பிகாபுரம், சின்ன உபதலை, பெரிய உபதலை,ஆலோரை,பர்லியார், கக்கன் நகர், காந்திநகர் பழத்தோட்டம் ஆகிய பகுதிகளில் தீவிரமாக வாக்கு சேகரித்தார். அப்போது குன்னூர் பழத்தோட்டம் பகுதியில் ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்று இணைந்து சுமார் 1 கிலோமீட்டர் தூரம் மாலை அணிவித்தும், ஆரத்தி எடுத்தும், மத்தளம் கொட்டி ஊர்வலமாக வரவேற்றனர். அப்பொழுது கே எம் ராஜா அவர்கள் கூட்டத்தில் பேசியதாவது திராவிட மாடல் ஆட்சி நாயகர் தளபதியார் அவர்களின் ஐந்தாண்டு நல்லாட்சியை தொடர எதிர்வரும் 2.0 திராவிட மாடல் ஆட்சியையும் அதில் குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளையும் கூறி பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன், அவைத் தலைவர் போஜன் சிபிஐ மாநில தலைவர் பெள்ளி,தேமுதிக மாவட்ட செயலாளர் செல்வம்,ஒன்றிய செயலாளர் பிரேம்குமார்,மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தீனதயாளன் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சா. கணேசன்

### ஏப்ரல் 13 (2018)



தனது இளமை காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்து கொண்ட இவர், பி அன்ட் சி மில் அங்காடி விற்பனையாளராக இருந்தபோதே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் பழகியவர்.

1959, 64, 68 ஆகிய மூன்று முறை தொடர்ந்து மாமன்ற உறுப்பினராகவும் – 1970–ல் சென்னை மாநகர மேயராகவும் – தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

சென்னை மாநகர மக்களின் அடிப்படை பிரச்னைகளை தீர்த்து வைப்பதில் தனி முத்திரை பதித்தவர், இவர், கவுன்சிலர் என்ற முறையில் மாநகர பேருந்துகளில் பயணித்து மக்களின் குறைகளை நேரடியாக அறிந்ததோடு, மேயராக இருந்த போது மும்பை மேயர்கள் மாநாட்டில் பங்கேற்று வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி, தமிழகத்திற்கும் கழகத்திற்கும் பெருமை சேர்த்தவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

“தன்னலம் பார்க்காமல் கட்சிக்காக உழைத்த, சுயநலம் பார்க்காமல் பொதுநலம் ஒன்றை மனதில் வைத்து, இந்த மாநகர மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்காக பாடுபட்ட ஒரு தொண்டரின் படத்தை; தொண்டர் என்பதை விட மக்களின் ஊழியரின் படத்தை அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்கள் ஊழியரின் படத்தை இங்கே திறந்து வைத்திருக்கிறேன்.” என கழகத் தலைவர் அவர்கள் இவரது படத்திறப்பு விழா உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பர்கூர் சட்டமன்றத் தொகுதி

## கழக வேட்பாளர் மதியழகன் கிராமம், கிராமமாக வாக்கு சேகரிப்பு!

பர்கூர், ஏப். 13 -

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர், திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல்ஏ போட்டியிடுகிறார்.

அவர் பர்கூர் சட்டமன்றத் தொகுதி, நாகரசம்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட வேலம்பட்டி நாகரசம்பட்டி தட்டக்கல் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாக்காளர்களை சந்தித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் திராவிட மாடல் அரசியல் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறியும், வருகிற திராவிட மாடல் 2.0 ஆட்சியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையில் அமையக்கூடிய 2.0 ஆட்சியில் செயல்படுத்த உள்ள திட்டங்களையும் வாக்காளர்களுக்கு எடுத்துக்கூறி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இந்த பிரச்சாரத்தின் போது நாகரசம்பட்டி கிராமத்தில் போண்டா, வடை சுட்டு வியாபாரம் செய்து கொண்டிருக்கும் பெண்ணிடம் வாக்கு சேகரித்த அவர் அந்த கடையில் அமர்ந்து போண்டா, வடை சுட்டு மக்களுக்கு வழங்கினார். ஒரு சட்டமன்ற உறுப்பினர் வேட்பாளர் ஒரு சிறிய கிராமத்தில் போண்டா, வடை சுட்டு மக்களுக்கு வழங்கியது கண்டு அந்த பகுதியில் மக்கள் மிகவும் ஆச்சரியமடைந்தனர்.

இந்த பிரச்சாரத்தின் போது மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், பேரூர் கழக செயலாளர் தம்பிதுரை , பேரூராட்சி துணைத் தலைவர் குமார் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் – ஆலத்தூர் மேற்கில் – தொகுதிப் பார்வையாளர்

## தங்க.சித்தார்த்தன் - உதயசூரியனுக்கு வாக்கு சேகரிப்பு!

பெரம்பலூர், ஏப். 13 -

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு தீவிர பிரச்சாரம் செய்தார்.

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன்

ஆலத்தூர் மேற்கு ஒன்றியத்தில் நாரணமங்கலம், விஜயகோபாலபுரம், மருதடி,

ஆலத்தூர், இரூர், பாடாலூர், திருவளக்குறிச்சி, நாட்டார்மங்கலம்,கூத்தனூர்,

செட்டிக்குளம், மாவிலங்கை உள்ளிட்ட கிராமங்களில் தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்களை சந்தித்து, தி.மு.க.அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு இன்று திண்ணைப்பிரச்சாரம் செய்தார்.இந்நிகழ்ச்சியில் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் உள்ளிட்ட தி.மு.க.வினர் மற்றும் கழகத் தோழர்களும் ஒன்றினைந்து வாக்குகள் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை மிசா இரா. துரை

### ஏப்ரல் 13 (2010)



மாணவப் பருவத்திலேயே தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் மேடைப் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு கழகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் குடந்தை இரா.துரை அவர்கள்.

கழகம் தொடங்கப்பட்ட அன்றே உறுப்பினராக இணைந்தவர். 1962ஆம் ஆண்டில் நடைபெற்ற விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறைவாசம்; அவசரநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் மட்டுமன்றி, கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

குடந்தை நகரக் கழகச் செயலாளராக 30 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றிய இவர், அதற்கு முன்னர் நகரக் கழகப் பொருளாளராகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார். 1971ஆம் ஆண்டு முதல் குடந்தை நகரமன்ற உறுப்பினராகவும், நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**